பட்டு, தமிழ் நாட்டிற்கே திரும்பி வருகிறது. இப்பேர்ப்பட்ட போக்கை மாற்றுவதற்கு விசைத் தறிகளை வேகமாகக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 12,500 விசைத் தறிகள் கொடுப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

சிற்பக் கலை

***165 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழகத்தில் சிற்பக் கலையினைப் பாதுகாத்திட அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கற்சிற்பக்கலையைப் பாதுகாப்பதற்காக மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு கற்சிற்பக் கலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கு உற்பத்திக்கூடம் ஒன்றும் இணைக்கப்பட்டு வெளியிலிருந்து வரும் தேவைகளுக்கேற்ப சிற்பங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : சிற்பக் கலைகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பைக் கூட மத்திய அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே? அதையாவது மாநில அரசு மேற்கொண்டு செயல் முறைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பழைய சிலைகளைப் பாதுகாப்பது பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது பற்றி நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே மாநிலத்தினுடைய பொறுப்பில் வரவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பட்டு உற்பத்தி

***166 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தியினை அதிகரிக்கச் செய்ய 'மல்பரி' மரங்கள் வளர்க்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகின்றதா?